# திருக்குறள்

1. மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன்
   ஆகுல நீர பிற.    (34- அறம்)

   **ஒருவர் மனது அளவில் தூய்மையாக இருப்பதுதான் சிறந்த அறச்செயல் ஆகும்.**

2. அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர்
   புன்கண்நீர் பூசல் தரும். (71 - அறம்)

   **ஒருவர் மீது உள்ள அன்பை மறைத்து வைக்க முடியாது. நம் கண்களில் வழியும் கண்ணீர் நம் அன்பை வெளிப்படுத்தி விடும்.**

3. அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர் அன்புடையர்
   என்பும் உரியர் பிறர்க்கு. (72- அறம்)

   **அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளும் தன்னுடையது என்பர், அன்பு உடையவர் தன் உடல், பொருள் எல்லாம் பிறர்க்குக் கொடுப்பர்.**

4. என்பில் அதனை வெயில் போலக் காயுமே
   அன்பில் அதனை அறம். (77 - அறம்)

   **எலும்பு இல்லாத உடலை வெயில் சுடுவதுபோல், அன்பு இல்லாதவர்களை அறம் சுடும்.**

5. மோப்பக்குழையும் அனிச்சம் முகம் திரிந்து
   நோக்கக் குழையும் விருந்து. (90 - அறம்)

   **முகந்து பார்த்தால் அனிச்சப்பூ வாடிவிடும். முகம் வேறுபட்டுப் பார்த்தால் விருந்தினர் மனம் வருந்திவிடும்.**

6. இனிய உளவாக இன்னாத கூறல்
கனி இருப்பக் காய் கவர்ந்து அற்று. (100 - அறம்)

**இனிமையான சொற்கள் இருக்கும்போது. கடுமையான சொற்களைப் பேசுவ பழங்கள் இருக்கும்போது காய்களைச் சாப்பிடுவது போன்றது.**

7. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. (101 - அறம்)

**எந்த நன்மையும் எதிர்பாராமல் ஒருவர் செய்யும் உதவிக்கு மண் உலகம், விண் உலகம் இரண்டும் ஈடாகாது.**

8. காலத்தினால் செய்த உதவி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. (102 - அறம்)

**தக்க சமயத்தில் சின்ன உதவி செய்தாலும்,
அது உலகத்தை விட மிகப்பெரிதாகும்.**

9. நன்றி மறப்பது நன்று அன்று நன்று அல்லது
அன்றே மறப்பது நன்று. (108 - அறம்)

**ஒருவர் செய்த உதவியை மறக்கக்கூடாது,
செய்த தீமையை உடனே மறப்பது நல்லது.**

10. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் உய்வு இல்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (110 - அறம்)

**எதை மறந்தாலும், ஒருவர் செய்த உதவியை
மறக்கவே கூடாது.**

11. யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல் இழுக்குப்பட்டு. (127 - அறம்)

**எந்தப் பொருளைக் காக்க முடியாவிட்டாலும், நாக்கினை காத்துச் சரியாகப்பேசவேண்டும். இல்லாவிட்டால் பேசும் வார்த்தையின் மூலம் பெரிய துன்பம் வரும்.**

12. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை. (151 - அறம்)

**நிலம் தன் மேல் நின்று குழி பறிப்பவரைப் பொறுத்துக் கொள்வதுபோல், ஒருவர் தன்னைத் தவறாகப் பேசுபவரைப் பொறுப்பது நல்லது.**

13. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொலல். (198 - அறம்)

**அரிய பயனைத் தரும் என்றாலும், பிறருக்கு நன்மையோ,பயனோ இல்லாத சொற்களை அறிவு உடையவர் பேசமாட்டார்.**

14. சொல்லுக சொல்லில் பயன் உடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச்சொல். (200 - அறம்)

**பயன்தரும் சொற்களை மட்டுமே பேசவேண்டும். பயன் தராத சொற்களைப் பேசக்கூடாது.**

15. பாத்தூண் மரீஇ இவனைப் பசி என்னும்
தீப்பிணி தீண்டல் அரிது. (227 - அறம்)

**தன்னிடம் இருக்கும் உணவினை மற்றவர்களுக்கும் கொடுத்து வாழ்பவர்களுக்குப் பசி என்பதே இருக்காது.**

16. ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு. (231 - அறம்)

**பிறருக்கு உதவுதல், புகழ் பெற்று வாழ்தல் இரண்டும் தவிர மனிதருக்கு வேறு பெருமை இல்லை.**

17. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும். (260 - பொருள்)

**பிற உயிரைக் கொல்லாதவரை, உயிர்களைக் கொன்று உண்ணாதவரை இந்த மண்ணில் வாழும் எல்லா உயிர்களும் இரு கை கூப்பி வணங்கும்.**

18. வாய்மை எனப்படுவது யாது எனின் யாது ஒன்றும்
தீமை இலாத சொலல். (291 - பொருள்)

**யாருக்கும் துன்பம் தராத சொற்களைப் பேசுவதுதான் உண்மை எனப்படும்.**

19. தன் நெஞ்சு அறிவது பொய் அற்க பொய்த்தபின்
தன் நெஞ்சே தன்னைச் சுடும். (293 - பொருள்)

**தன் உள்ளத்திற்குப் பொய் என்று தெரிந்தும் பொய் சொன்னால் நம் உள்ளமே நம்மை வருத்தும்.**

20. மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனால் வரும். (303 - பொருள்)

**மற்றவர்கள் மேல் உள்ள கோபத்தை மறந்து விட வேண்டும். மறக்காவிட்டால் அந்தக் கோபமே தீமை அளித்துவிடும்.**

21. பகுத்து உண்டு பல் உயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. (322 - பொருள்)

**உலகத்தில் உள்ள நல்ல செயல்களில் எல்லாம் சிறந்தது, தன்னிடம் இருக்கும் பொருளை அனைவருக்கும் பகிர்ந்து வாழ்வது ஆகும்.**

22. தன் உயிர் நீப்பினும் செய்யற்க தான் பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை. (327 - பொருள்)

**தன்னுடைய உயிர் போகும் நிலை வந்தாலும், இன்னொரு உயிரைக் கொல்லும் செயலைச் செய்யக் கூடாது.**

23. கற்க கசடற, கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (391 - பொருள்)

**நல்லாப் படிக்கணும், படித்த மாதிரி நடந்துக்கணும்.**

24. கேடு இல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றயவை. (400 - பொருள்)

**ஒருவருக்கு எப்பொழுதும் அழிவும், இழிவும் இல்லாத செல்வம் கல்வி ஆகும். மற்றவை எதுவும் செல்வங்கள் அல்ல.**

25. செவிக்கு உணவு இல்லாதபோது சிறிது
வயிற்றுக்கும் ஈயப்படும். (412 - பொருள்)

**காதினால் கேட்டுப் பயன் பெற எதுவும் இல்லாதபோது, சிறிது வயிற்றுப்பசிக்கும் உணவு தரப்படும்.**

26. எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். (416 - பொருள்)

**நல்ல செய்திகளைக் கேட்கும் அளவிற்கு நிறைந்த நன்மை தரும்.**

27. எண்ணித் துணிக கருமம், துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு. (457 - பொருள்)

**ஒரு செயலைச் செய்யும் முன் தெளிவாக முடிவு செய்ய வேண்டும். முடிவு செய்தபின், முடியுமா? என்று நினைப்பது தவறு.**

28. சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல் செல்வம் தான்
பெற்றத்தால் பெற்ற பயன். (524 - பொருள்)

**தன்னைச் சுற்றி உள்ள உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் உதவி அன்புடன் வாழ்வதுதான் நிறைய செல்வங்களைப் பெற்றதற்குப் பெருமை ஆகும்.**

29. உள்ளியது எளிது மண் மற்றும் தான்
உள்ளியது உள்ளப் பெறின். (540 - பொருள்)

**நாம் வெற்றி பெற வேண்டும் என்று நினைக்கிற செயலை உறுதியோடு நினைத்துச் செய்தால் எளிதாக வெற்றி பெறலாம்.**

30. உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல் மற்று அது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து. (596 - பொருள்)

**நாம் அடைய நினைப்பது உயர்ந்த செயலாக இருக்கவேண்டும். அதைப்பெற முடியாவிட்டாலும் தோல்வியாக ஆகாது.**

31. முயற்சி திருவினை ஆக்கும் முயற்று இன்மை
இன்மை புகுத்துவிடும். (616 - பொருள்)

**முயற்சி செய்தால் மட்டுமே செல்வம் வரும். முயற்சி செய்யாது இருந்தால் வறுமை நிலை வரும்.**

32. இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர். (623 - பொருள்)

**பெரிய துன்பம் வந்தாலும் வருத்தப்படாமல் உறுதியோடு இருப்பவர், அந்த துன்பத்திற்கே துன்பம் கொடுப்பர்.**

33. அடுக்கி வரினும் அழிவு இலான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும். (625 - பொருள்)

**திரும்பத் திரும்ப அடுக்கு அடுக்காய்த் துன்பம் வந்தாலும், அதைகண்டு பயம் இல்லாமல் உறுதியோடு இருப்பவரைப் பார்த்து அந்தத் துன்பமே துன்பப்படும்.**

34. ஆக்கமும் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின் கண் சோர்வு. (642 - பொருள்)

**ஒருவருக்கு நல்லதும் , கெட்டதும் பேசும் வார்த்தையினால் வரும். அதனால் பேசும்பொழுது கவனமாகப் பேச வேண்டும்.**

35. சொல்லுக சொல்லைப் பிறிது ஓர் சொல் அச்சொல்லின்
வெல்லும்சொல் இன்மை அறிந்து. (645 - பொருள்)

**நாம் சொல்லும் வார்த்தையை வெல்லும் வார்த்தை வேறு இல்லை எனத் தெரிந்து சொல்லவேண்டும்.**

36. என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. (652 - பொருள்)

**புகழையும், நன்மையயும் தராத செயலைச் செய்வதை விடவேண்டும்.**

37. எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின். (666 - பொருள்)

**தாம் எண்ணியதை செய்வதில் உறுதியோடு இருந்தால் எண்ணிய செயலில் வெற்றி பெறலாம்.**

38. கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல். (668 - பொருள்)

**மன உறுதியோடு செய்யத் தொடங்கிய வேலையை மனம் சோர்வுபடாமல் செய்து முடிக்க வேண்டும்.**

39. கற்று அறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல் தெரிதல் வல்லார் அகத்து. (717 - பொருள்)

**நன்றாகப் படித்தவர்களின் கல்வி அறிவு, ஒரு கருத்தைத் தெளிவாகப் பேசும்பொழுது தெரியும்.**

40. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு. (786 - பொருள்)

**பார்க்கும் பொழுது முகத்தளவில் சிரித்துப் பேசுவது நட்பு இல்லை, மனதளவில் உண்மையாகப் பழகுவதே நட்பு ஆகும்.**

41. மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி எனின். (942 - பொருள்)

**உண்ட உணவு முழுமையாகச் செரிமானம் ஆன பின்னர் சாப்பிட்டால் நம் உடம்பிற்கு மருந்து என்பதே தேவை இல்லை.**

42. கற்றாருள் கற்றார் எனபடுவர் கற்றார் முன்
கற்ற செலச் சொல்லுவார். (722 - பொருள்)

**நன்றாகப் படித்தவர்கள் முன்னால், தான் படித்துத் தெரிந்து கொண்டதைத் தெளிவாகச் சொல்லுபவர்தான் படித்தவர்கள் அனைவரிலும் சிறந்தவர்.**

43. முகநக நட்பது நட்பு அன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு. (786 - பொருள்)

**மனதிற்குள் அன்பு இல்லாமல் சிரித்துப் பழகுவது நட்பு அன்று. உள்ளத்தில் அன்போடு பழகுவதே உண்மையான நட்பு.**

44. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. (788 - பொருள்)

**நம் உடம்பில் இருந்து நழுவும் உடையைச் சரி செய்ய உதவும் கையைப்போல, துன்பம் வரும்போது முன்வந்து உதவுவதுதான் சிறந்த நட்பு.**

45. ஆய்ந்து ஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தாம்சாம் துன்பம் தரும். (792 - பொருள்)
**தெளிவாக ஆராய்ந்து தேர்ந்து எடுக்காத தீய நட்பு இறப்பது போலத் துன்பம் தரும்.**

46. மருந்து என வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். (942 - பொருள்)

**சாப்பிட்ட உணவு செரித்தபின் அடுத்த உணவை உண்டால் நம் உடம்பிற்கு மருந்தே தேவை இல்லை.**

47. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. (963 - பொருள்)

**வாழ்வில் உயர்வான நிலை வரும்போது பணிவாக இருக்க வேண்டும். தாழ்வான நிலை வரும்போது வருந்தி தன் நிலை விட்டுக் கொடுக்காமல் இருக்க வேண்டும்.**

48. கருமம் செய ஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடு உடையது இல். (1021 - பொருள்)

**தன் கடமையைச் செய்வதில் சோர்வு கொள்ளாமல் ஒருவன் முயற்சி செய்தால் அதைவிடப் பெருமை வேறு இல்லை.**

49. நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாது ஒன்றும் கண்பாடு அரிது.(1049 - பொருள்)

**நெருப்புக்குள் கூடத் தூங்கிவிடலாம்.
வறுமையில் வாழும்போது தூங்குவது முடியாது.**

50. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாய்ச் சுற்றும் உலகு. (1025 - பொருள்)

**தவறு இல்லாது வீட்டிற்கும், நாட்டிற்கும் நல்லது செய்பவரை, மக்கள் தன் உறவினராக ஏற்றுக் கொள்வர்.**